மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: நம் கவனக் குறைவாக இருந்திருக்கும். மாவட்ட மருத்துவ மனையிலிருந்து நாம் அனுப்பாதிருந்தால் Post haste in sending medicine immediately கவனக் குறைவாக இருந்திருக்கும். அந்தச் சூழ்நிலையிருந்தாலும்கூட சமாளித்து கவனக் குறைவு இல்லாமல்— நாய்க்கடியிலே இரண்டு வகைகள் இருக்கின்றன, மேட் டாக் பைட் இருந்தால், ரேபிஷ், அதற்கு மருந்தும், சாதாரணமான நாய் கடித்துவிட்டால் பை வே ஆப் அபன்டன்ட் காஷன் பாதுகாப்புக்காக ஊசி போடுகிறோம். நடவடிக்கை எடுத்திருக்கிறோம். பைத்திய நாயாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், சாதாரண நாய் கடித்தாலும் அதற்கு 7 ஊசிகள் போடுகிறோம், இதற்கு 14 ஊசிகள் போடுகிறோம். தட்டுப்பாடு இருந்தாலும்கூட உடனடியாக சமாளித்து இருக்கிறோம். அது மட்டுமல்லாமல் நடவடிக்கையையும் எடுத்திருக்கிறோம். By way of abundant caution, a permanent advance of Rs. 1000 ஆயிரம் ரூபாய் மாவட்ட மருத்துவ மனைக்கு முன் கூட்டியே பாஷ்டியூர் இன்ஸ்டியூட்டிற்கு அந்தப் பணத்தைக் கட்டிவிடுங்கள் எந்தவிதமான தாமதமும் ஆகிவிடக்கூடாது என்று அட்வான்ஸாகக் கொடுத்து வைத்திருக்கிறோம். ஆகவே இனிமேல் இப்படிப்பட்ட பிரச்சினைக்கு வாய்ப்பு இல்லை.

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் தீக்காயங்களுக்கான தனி வார்டு.

*வினா எண் 571—திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் தீக்காயங்களுக்காக தனியாக ஏர்கண்டிஷன் வார்டு ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் உடனடியாக துவங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முசிறி பகுதியிலுள்ள குஷ்டரோகிகள்.

*வினா எண் 572—திரு. எம். கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி பகுதியில் குஷ்டரோகிகள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பது உண்மையா?